அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - டி.ஆர்.பி.ராஜா பேட்டி... முதல் பக்கத் தொடரர்ச்சி

இருக்கக்கூடிய இராணிப்பேட்டை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பரவலாக இத்தகைய முதலீடுகள் இன்றைக்கு அமையக்கூடிய வகையில் தொழில் திட்டங்கள் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் திட்டங்களுக்கு வழங்கப்படும் சலுகை!

கேள்வி : என்ன மாதிரியான சலுகைகள் வழங்கப்பட்டிருக்கிறது?

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதில் : ஒவ்வொரு இண்டஸ்ரிஸ் பாலிஸியில் நாம் என்ன சலுகைகள் வழங்குகிறோமோ அந்த சலுகைகள் வழங்கப்படுகிறது. அதற்கு மேல் இருக்கக்கூடிய சலுகைகள் Inter Department committee (IDC)யில் என்ன recommend செய்திருக்கிறார்களோ அந்த சலுகைகள் வழங்கப்படுகிறது.

கேள்வி : எந்த காலக்கட்டத்தில் வழங்கப்படுகிறது?

நிதி அமைச்சர் : தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அமெரிக்க பயணத்தில் சில திட்டங்கள் வந்திருக்கிறது. அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்ற முதலீட்டுத் திட்டங்கள் வந்திருக்கிறது. எனவே, அப்போதைக்கப்போது நாம் செய்திருக்கக்கூடிய முதலீட்டுத் திட்டங்கள் வந்திருக்கின்றன. அதேபோல, அமைப்பு ரீதியிலான சில சலுகைகளுக்கு extension கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான முதலீடுகள் ஏற்கனவே வந்திருக்கிறது.

வேலை வாய்ப்புகள் அதிகரிக்க நடவடிக்கை!

கேள்வி : 3 வருடங்களில் வேலை வாய்ப்புகள் எப்படி உயர்ந்துள்ளது?

அமைச்சர்: இந்தத் திட்டங்களை பார்த்தால், ஏறத்தாழ 46,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக நம்முடைய இலக்கை அடைவதற்கு மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்குவது மிகவும் முக்கியம். ஏனென்றால், படித்த தகுதியானவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. எனவே, அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுதான் நாம் குறிப்பிட்டி ருக்கின்ற பல துறைகளிலும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

கேள்வி : சாம்சங் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்து கொண் டிருக்கிறது. அதை எப்படி பார்க்கிறீர்கள்.

நிதி அமைச்சர்: சாம்சங் தொழிலாளர்களின் போராட்டம் குறித்து முதலமைச்சர் அவர்கள் மூன்று பேர் கொண்டிருக்கக்கூடிய அமைச்சரவையில் குழுவை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்கள் அதில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

சாம்சங் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு!

கேள்வி : பேச்சுவார்த்தையின்போது 15 கோரிக்கைகள் ஏற்கப்பட்டும், தொடர்ந்து இன்றைக்கும் போராட்டம் தொடர்கிறது அது பற்றி.....

தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதில் : சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சனையை பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதல் நாள் முதலே இதில் மிகந்த கவனம் செலுத்தி வருகிறார். ஏழு முறை தொழிலாளர் நலன் துறையின் சார்பாக, பல பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு இன்னும் ஒரு தீர்வு எட்டப்படாத நிலை இருக்கிறது. எனவே, குறு, சிறு துறை அமைச்சர் அவர்களும், தொழில்துறை அமைச்சர் என்ற முறையில் என்னையும் இந்த போராட்டத்தை விரைவில் ஒரு தீர்வு காண்பதற்கான வேலைகளில் இறங்குமாறு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். எனவே, இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த நிறுவனத்தை நேரடியாக சந்தித்து அவர்களிடம் பேசினேன். அதற்கு பிறகு 3 அமைச்சர்களும் சேர்ந்து நேற்றைக்கு கிட்டத்தட்ட 10-12 மணி நேரம் பேச்சு வார்த்தை நடந்து உங்களுக்கு நன்றாக தெரியும். பல கட்ட பேச்சு வார்த்தைகளில் முதலில் நிறுவனத்திடம் பேசினோம்; CITU மற்றும் அதனைச் சேர்ந்த தோழர்களிடம் பேசினோம். அவர்களது feed back வாங்கினோம்.

அவர்கள் கம்பெனியில் உள்ள கோரிக்கைகளை பற்றி பேசினார்கள். பிறகு நிறுவனத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களிடம் பேசினோம். அங்கே 500- 550 பேர் வரை வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அவர்களுடைய கோணத்திலிருந்து பேசினார்கள். எங்களுக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுபோல போராட்டம் நடத்தினால், வேலை போகின்ற அளவிற்கு ஏன் தள்ளுகிறீர்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். நீங்கள் எப்படியாவது சரி செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோணத்திலிருந்து பார்த்தால், போராட்டம் அவர்களை பாதிக்கின்றது. போராட்டம் நடத்துகின்ற தொழிலாளர்களின் முக்கிய ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால், அவர்கள் CITUவின் சங்கத்தை Register செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள். மீதியுள்ள அனைத்து கோரிக்கைகளையும் நிறுவனம் ஒத்துக்கொண்டு விட்டது. CITUவின் registration பொறுத்தவரை கோர்ட்டில் உள்ளதால், தீர்ப்பு என்ன வருகிறதோ, அதற்கேற்ப நாங்கள் செவிசாய்கிறோம் என்று கூறுகிறார்கள். கோர்ட்டில் இருக்கும்போது நாங்கள் என்ன செய்யமுடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதனால், தொடர்ந்து ஒரே ஒரு கோரிக்கைகாக தான் இன்று அவர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் இருந்து வருகிறார்கள். அது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்று மக்களிடத்தில் விட்டு விடுகிறேன்.

தொழிலாளர்களின் கோரிக்கை நிர்வாகம் ஏற்கிறது!

சமீபத்தில் திருமணமான பல இளைஞர்கள் அங்கே வேலை செய்து வருகிறார்கள். 12ஆம் வகுப்பு மற்றும் ITI முடித்தவர்களுக்கு கிட்டத்தட்ட 70000 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கிறார்கள். எல்லாருக்கும் 21000 ரூபாய் கொடுக்கிறார்கள் என்பது ஒரு தவறான செய்தி. 21000 ரூபாய் ஒரே ஒரு நபருக்கு அவர் சரியாக வேலைக்கு வரவில்லை என்பதற்காக அவருக்கு ஊதியம் கொடுக்கவில்லை. உண்மையிலேயே, நிறுவனம் சொல்வது என்னவென்றால், நாங்கள் இவரை பணியில் இருந்து நிறுத்தியிருக்க வேண்டும்; ஆனால், மனிதாபிமான அடிப்படையில், அவர் என்ன காரணத்திற்காக விடுப்பு எடுத்திருக்கிறாரோ, அதனால் நாங்கள் அவரை நீக்காமல், இன்னும் அவரை வேலையில்தான் வைத்திருக்கிறோம்.

அந்த ஒரு நபர் தவிர, மீதமுள்ள 35000 ரூபாய்க்கு மேல்தான் ஊதியம் வாங்குகிறார்கள். பலரும் 60000 - 70000 ரூபாய் வரை வாங்குகிறார்கள். எனவே, அது ஒரு புறம் இருக்கிறது. என்னதான் இருந்தாலும், அவர்கள் இந்த பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வந்து கையெழுத்திடவேண்டும்என்றஅவசியமில்லை. நாங்களாக முன்வந்து முதல் கட்டமாக இப்போது அனைத்து மாதங்களுக்கும் 5000 ரூபாய் அறிவிப்பை கொடுக்கிறார்கள். அவர்கள் கேட்டது 5 ஏசி பஸ்தான் அங்கே ஓடுகிறது. 108 பஸ்ஸும் ஏசி பஸ்ஸாக நாங்கள் செய்து தருகிறோம் என்று சொல்கிறார்கள். பூட்டின் தரம் சரியில்லை என்று சொன்னார்கள். அதையும் தரம் உயர்த்தி தருவதாக சொன்னார்கள். உயர் தரமான உணவை வழங்குவதற்கான ஏற்பாடு செய்து தருகிறோம் என்று சொன்னார்கள். கழிவறை போதவில்லை என்று சொன்னார்கள்; அதையும் உயர்த்தி தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி 14 கட்ட கோரிக்கைகளையும், இன்னும் கோரிக்கைகள் இருக்கிறதா? வாருங்கள் பேசுவோம் என்று அந்த நிறுவனம் சொல்லியிருக்கிறது.

CITU தரப்பை பொறுத்தவரைக்கும், ஒரே ஒரு கோரிக்கைதான். CITU பதிவு செய்யவேண்டும் என்பதுதான். அந்த யூனியன் registration கோர்ட்டில் இருக்கிறது; கோர்ட்டில் இருந்து தீர்ப்பு வந்தவுடன் அதற்கான தீர்வு காணப்படும். இதில் என்ன பிரச்சனை இருக்கிறது; எதற்காக இந்த போராட்டத்தை தொடர்கிறார்கள்? என்று தெரியவில்லை. முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஈடுபட்டு, மூன்று அமைச்சர்களை நியமித்து, நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி, இவ்வளவு தூரம் பேசியும் போராட்டத்தை தொடர்வது அவ்வளவு நல்லதாக இருக்காது. ஒவ்வொரு அவர்களுடைய சம்பளம் இழப்பீடாகிறது. இது எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை. ஒரு registrationகாக இவர்களின் ஊதியம் போகவேண்டுமா? ஏற்கனவே, ஒரு மாத ஊதியம் போய்விடும். இன்னும் ஒவ்வொரு நாளும் தாமதித்தால், ஊதியம் போய்க்கொண்டிருக்கிறது.

முதல்வரிடம் தெரிவித்து வருகிறோம்!

நாங்கள் ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் அவர்களிடம் மீண்டும், மீண்டும் அனைத்து கூட்டங்களிலும் பேசிக் கொண்டு வருகிறோம். அவருக்கு எத்தனை இலட்சம் கோடி முதலீடு வந்தது; யார் முதலீடு செய்கிறார்கள் என்று கேட்பதே இல்லை. யாருக்கு வேலைவாய்ப்பு? எங்கே வேலைவாய்ப்பு? எப்படிப்பட்ட வேலைவாய்ப்பு? என்றுதான் தொடர்ந்து பேசுகிறார். அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் இருக்கும்போது, ஒரு தொழிலாளர்களைச் சார்ந்து அவர்களுக்கு உறுதுணையாக நின்று இன்னும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவேண்டும் என்று இப்படி வேலை செய்துகொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். உங்களது தோழர் அவர். அவர் நேரடியாக உங்களது பக்கம் நிற்கிறார். உங்களுக்கு இன்னும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்று துடிக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அவரது ஆட்சியில் நீங்கள் இன்னும் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த போராட்டத்திலிருந்து நீங்கள் நேரடியாக வேலைக்குச் செல்ல வேண்டும். எல்லாக் கோரிக்கைகளும் நிச்சயமாக பரிசீலிக்கப்படும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இப்போதைக்கு தோழர்கள் அனைவரும் தயவு செய்து நீங்கள் பணிக்கு திரும்ப வேண்டும்.

இதனால் என்ன effect இருக்கிறது என்று எல்லாப் பிள்ளைகளும் தயவு செய்து யோசியுங்கள். எல்லா தோழர்களும் யோசிக்க வேண்டிய ஒரே விஷயம், இவ்வளவு சிரமப்பட்டு, 10 ஆண்டு காலம் இருண்ட ஆட்சியிலிருந்த நிலை மாற்றி, 10 ஆண்டுகாலம் நமக்கு கிடைக்காத வளர்ச்சியை, 3 ஆண்டுகளில் கொண்டு வந்து சேர்த்து 10 இலட்சம் கோடிக்கான முதலீடுகளை கொண்டுவந்து சேர்த்து, 31 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி அற்புதமான பணியைச் செய்திருக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த தருணத்தில், இது போன்ற போராட்டத்தினால், அடுத்த போட்டியாளர்கள் இதை வேறு மாதிரி திசைத் திருப்புவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. மற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை கருதி, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மக்களின் வேலைவாய்ப்புகளை கருத்தில் கொண்டு உங்களால் எந்தவித பாதிப்பும் வந்துவிடக் கூடாது என்பதை மனதில் ஏந்தி, உங்களது பக்கம் முழுமையாக இந்த அரசாங்கம் நிற்கிறது, முதலமைச்சர் அவர்கள் நிற்கிறார் என்பதை நீங்கள் மனதில் ஏந்தி உடனடியாக வேலைக்கு திரும்ப வேண்டும். CITUயை மீண்டும் நாங்கள் சொல்கின்றோம். அவர்களின் Registration மட்டும்தான். அதன் Registration கோர்ட்டில் இருக்கிறது. கோர்ட்டில் இருந்து வந்தபிறகு நிச்சயமாக அதற்கான தீர்வும் காணப்படும்.

கேள்வி : CITU ஒரு குற்றச்சாட்டு வைக்கிறது. தமிழக அரசும், அமைச்சர்களும் சாம்சங் நிறுவனத்திற்கு சாதகமாகவே முடிவெடுக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்? அது பற்றி.....

தொழிற்துறை அமைச்சர் பதில் : அப்படி உங்களுக்கு தோன்றுகிறதா? அவர்கள் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு அவர்களின் தரப்பு மக்கள் வைத்ததற்காக பேசுகிறார்களா என்பது தெரியவில்லை.

இவ்வாறு குறிப்பிட்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/3937/2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் – 5, 8, 9, 10, 13ல் உள்ள பேருந்து தட சாலைகளில் நடைபாதைகளை மேம்படுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் பணி

பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் **ரூ.548.00 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 28.10.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 29.10.2024 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4184 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

ஆதிதிராவிடர் - பழங்குடி இனத்தவர்க்கு பல்வேறு பயிற்சிகள்!

'தாட்கோ' மேலாண்மை இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, அக்.9-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்தவர்களுக்கு, தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலி துறை (Logistics and Supply Chain Sector) மூலம் கிடங்கு மேலாண்மை (Warehouse Management), கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான தொழில் பயிற்சி திட்டங்களை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, தளவாடங்கள் மற்றும் விநியோக சங்கிலி துறை (Logistics and Supply Chain Sector) மூலம் கிடங்கு மேலாண்மை (Warehouse Management), கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

கிடங்கு மேலாண்மை (Warehouse Management) பயிற்சிக்கு டிப்ளமோ, மற்றும் ஏதேனும் பட்டப்படிப்பில் தேர்ச்சியும், கிடங்கு பிக்கர் மற்றும் பேக்கர் (Warehouse Picker & Packer) பயிற்சிக்கு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு, தொழிற்பயிற்சியில் (ITI) தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

இதற்கான தகுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்கவேண்டும்.

இப்பயிற்சி முடித்த உடன் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளம் www.tahdco.com மூலம் பதிவு செய்யலாம் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

ரூ.38,698 கோடி மதிப்பில் 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல்!

46,931 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள்!

அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக்.9-

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில், "46,931 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை"ப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில், மின்னணுப் பொருட்கள், பாதுகாப்பு, மருத்துவம், தோல் அல்லாத காலணிகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின் வாகனங்கள், தொலைத்தொடர்பு எனப் பல்வேறு துறைகளில் பரவலாக 12 மாவட்டங்களில், 46,931 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய ரூ.38,698.8 கோடி மதிப்பிலான 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு!

கழகத் தோழர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்- வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாகச் செய்திடுவீர்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. சென்னை வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டள்ளது.

இது தவிர தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்ட 9.11.2024, 10.11.2024 மற்றும் 23.11.2024, 24.11.2024 சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்களர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறதா பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பட்டியலில் பெயர் சேர்த்தல்	படிவம் 6
பெயர் நீக்கம்	படிவம் 7
தவறுகள் திருத்தம், சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், வாக்காளர் அட்டை நகல்	படிவம் 8
அயல்நாடு வாழ் வாக்காளர்களை சேர்க்க (NRI Voters)	படிவம் – 6A
ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க	படிவம் – 6B
மேலும் சேர்ப்பதற்கு இணையதளம்	www.nvsp.in www.voterportal.gov.in

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க/ நீக்க திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 9.11.2024, 10.11.2024 மற்றும் 23.11.2024, 24.11.2024
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும், மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பகுதி செயலாளர்கள் வட்ட செயலாளர்கள் இந்த பணியினை ஒருங்கிணைத்து அதன் விவரத்தினை உடனடியாக மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2 க்கான மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC). இந்த பணியினை முழுமையாக ஈடுப்பட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.
செயலாளர், - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

சோழிங்கநல்லூர் தொகுதியில்

ரூ.1.80 கோடி மதிப்பில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி

ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

சென்னை, அக். 9 -

சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் கோவிலம்பாக்கம் ஊராட்சி ரோஸ் நகர் பகுதியில் 1.80 கோடி ரூபாய் மதிப்பில் மழைநீர் வடிகால்வை அமைக்கும் பணியை சோழிங்க நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் ஜி.வெங்கடேசன், மாவட்ட பிரதி ஆர். சொக்கலிங்கம் , ஒன்றிய குழு துணை தலைவர் பி.பிரசாத்,மாவட்ட குழு உறுப்பினர் என்.வேதகிரி, ஒன்றிய குழு உறுப்பினர் எஸ்.பன்னீர் செல்வம், ஊராட்சி மன்ற தலைவர் கீதா மணிமாறன் துணைத் தலைவர் சி.மணிமாறன் வார்டு உறுப்பினர்கள் சுஜிதா சத்யா, சுமதி குமார், மஞ்சுளாராஜேஷ், விஜயகுமார், ரேகாசெல்வராஜ், சற்குணம், விஸ்வநாதன், குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஜெகநாதன், சீனிவாசன், முத்து, சந்திரசேகர், ராஜி, சுதாகர், பழனி, துலுக்கானம், அய்யனார், ராமச்சந்திரன், சக்கரவர்த்தி, அறிவழகன், பெருமாள், அல்லி முத்து, குமார், பாலகிருஷ்ணன், பூபாலன், கதிர்வேல், ராஜமாணிக்கம், இளங்கோவன், செந்தில், யுவராஜ், மோகன், தட்சிணாமூர்த்தி, மோகன், சுரேஷ், தங்கமுத்து, ரவிக்குமார், சுந்தரமூர்த்தி, மதியழகன், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் ,கழக நிர்வாகிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்கும்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து. மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

பூத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்பார்வையிடுவதற்காக மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நியமனம் செய்யப்பட்டுள்ள தொகுதி பார்வையாளர்கள், ஆலந்தூர் தொகுதி இரா. ராஜீவ்காந்தி, திருப்பெரும்புதூர் தொகுதிகே.ஜி.பாஸ்கர் சுந்தரம், பல்லாவரம் தொகுதி ரத்னா லோகேஸ்வரன், தாம்பரம் தொகுதிகே.எஸ்.ரவிச்சந்திரன், செங்கல்பட்டு தொகுதி பிரபு கஜேந்திரன், திருப்போரூர் தொகுதிசி.தசரதன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. கழக அணிகளுக்கு மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் அளவில் நிர்வாகிகள் நியமனம் செய்வது குறித்து.

3. 29.10.2024 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் குறித்து.

4. கழக வளர்ச்சி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (07.10.2024) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2021– 22 முதல் 2024– 25 வரை அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கைகள், பொங்கல் பண்டிகை 2025 க்கான வேட்டி சேலை வழங்குதல், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் வே. அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர் இரா. லலிதா, மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.